1995 நவம்பர் 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

10. அரசினர் தீர்மானம்

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையை ஒத்திவைப்பதற்கான மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-இன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படலாம்"
என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3.06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

64. 1992-93ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (1978-ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

65. 1994-95ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1948-ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69(5) (ஏ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ். ஆங்கிலம்).

66. 1994-95ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

67. 1993-94ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

68. 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண் 1) (வணிகம்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)

69. 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண் 2) (சிவில்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்).

70. 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண் 3) (வருவாய் வரவினங்கள்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்).